**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 42/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 15.07.2025.**

| | |
|---|---|
| **Name : பூபதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டநாயக்கன்பட்டியில் குடியிருந்து பெங்களூரில் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி அய்யந்துரை வாசு என்பவரிடம் பணம் கேட்பார். அவர் பணம் கொடுக்கமாட்டார். கடந்த 2.7.2023ம் தேதி கட்டிநாயக்கன்பட்டியில் உள்ள மாரியம்மன் கோவிலில் வைத்து எதிரி வாசு என்பவரிடம் பணம் கேட்டார். அவர் அதற்கு இல்லை என்று சொன்ன போது கெட்ட வார்த்தையால் திட்டினார்.

2) கடந்த 06.07.2023ம் தேதி மாலை 05.15 மணிக்கு கட்டிநாயக்கன்பட்டியில் உள்ள மாரியம்மன் கோவில் முன்புறம் பேருந்து நிறுத்தத்தில் நான், வாசு, சசி, கண்ணன் நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அய்யந்துரை அங்கு வந்து வாசு என்பவரை நெஞ்சு மீது கையால் அடித்து, கீழே கிடந்த கட்டையை எடுத்து வாயின் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். அய்யந்துரை வாசுவை பார்த்து இந்த முறை தப்பித்துவிட்டாய் என்று சொல்லி கெட்ட வார்த்தையால் தெவிடியாபையா என்று திட்டினார்.

3) அடித்ததால் ஒரு பல் வாசுவிற்கு கீழே விழுந்துவிட்டது. அடித்த அடியினால் சுயநினைவு இல்லாமல் வாசு கீழே விழுந்துவிட்டார். வாசுவின் உதடு

கிழிந்துவிட்டது. வாசுவின் ஒரு பல் கொட்டிவிட்டது. வாயில் ரத்தம் வந்ததால் மயங்கிவிட்டார். பிறகு அவர் மாமா அர்த்தனாரி என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்.

போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 42/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 15.07.2025.**

| | |
|---|---|
| **Name : சசி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டநாயக்கன்பட்டியில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி அய்யந்துரை வாசு என்பவரிடம் பணம் கேட்பார். அவர் பணம் கொடுக்கமாட்டார். கடந்த 2023ம் வருடம் 2ம் தேதி கட்டிநாயக்கன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரி வாசு என்பவரிடம் பணம் கேட்டார். அவர் அதற்கு இல்லை என்று சொல்லிவிட்டார்.

2) கடந்த 2023ம் வருடத்தில் 6ம் தேதியன்று மாலை 05.15 மணிக்கு கட்டிநாயக்கன்பட்டியில் பேருந்து நிறுத்தத்தில் நான், வாசு, விஜய், கண்ணன் நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அய்யந்துரை அங்கு வந்து வாசு என்பவரை பார்த்து பணம் கேட்டு இல்லை என்று சொன்ன போது கெட்ட வார்த்தையால் தேவிடியா பையா என்று திட்டினார். பிரச்சனை செய்யாதே போ என்று சொன்ன போது பிறகு மீண்டும் கெட்ட வார்த்தை பேசி நெஞ்சு மீது கையால் அடித்து, கீழே கிடந்த கட்டையை எடுத்து அ.சா1ன் வாயின் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார்.

3) அடித்ததால் ஒரு பல் வாசுவிற்கு கீழே விழுந்துவிட்டது. இரண்டு பற்கள் ஆடிக்கொண்டிருந்தது. வாசுவின் உதடு கிழிந்துவிட்டது. உதடு, மூக்கு

ஆகியவை காயம் ஏற்பட்டது. பிறகு அவர் மாமா அர்த்தனாரி என்பவர் கார் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 42/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 15.07.2025.**

| | |
|---|---|
| **Name : விஜய்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டநாயக்கன்பட்டியில் குடியிருந்து தச்சராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எம்.ஜி.ஆர் (எ) அய்யந்துரை வாசு என்பவரிடம் பணம் கேட்பார். அ.சா.1 அவரிடம் பணம் கொடுப்பார். கடந்த 02.07.2023ம் தேதியன்று கட்டிநாயக்கன்பட்டி மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக சமயத்தில் வாசுவிடம் அய்யந்துரை என்பவர் பணம் கேட்டு அதற்கு இல்லை என்று சொல்லிவிட்டார்.

2) கடந்த 06.07.2023ம் தேதியன்று மதிய நேரத்தில் மைக் செட் இருந்த சமயத்தில் அய்யந்துரை அ.சா.1 யிடம் பணம் கேட்டார். அதற்கு எதிரி அ.சா.1யை பார்த்து தெவிடியா பையா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார், பிறகு சமாதானமாகி சென்றுவிட்டார்கள். அன்றையதினம் மாலை 05.15 மணிக்கு கட்டிநாயக்கன்பட்டியில் பேருந்து நிறுத்தத்தில் நான், சசி, பூபதி, கண்ணன் நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அய்யந்துரை அங்கு வந்து வாசு என்பவரை நெஞ்சு மீது கையை வைத்து கீழே தள்ளிவிட்டார். பிறகு கீழே கிடந்த கட்டையை எடுத்து அ.சா1ன் வாயின் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார்.

3) அடித்ததால் ஒரு பல் வாசுவிற்கு கீழே விழுந்துவிட்டது. பிறகு அ.சா.1 மயக்கமடைந்துவிட்டார். பிறகு அவர் மாமா அர்த்தனாரி என்பவர் பைக் மூலமாக கூட்டி செல்வதாக சொல்லிவிட்டு பிறகு கார் என்று மாற்றி சாட்சி சொல்லி பின்னர் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 42/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 15.07.2025.**

| | |
|---|---|
| **Name : கண்ணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டநாயக்கன்பட்டியில் குடியிருந்து தச்சராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி அய்யந்துரை வாசு என்பவரிடம் பணம் கேட்பார். அ.சா.1 அவரிடம் பணம் கொடுப்பார். கடந்த 06.07.2023ம் தேதியன்று மாலை 05.15 மணிக்கு கட்டிநாயக்கன்பட்டியில் பேருந்து நிறுத்தத்தில் நான், சசி, பூபதி, கண்ணன், விஜய் நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அய்யந்துரை அங்கு வந்து வாசு என்பவரை நெஞ்சு மீது கையை வைத்து கீழே தள்ளிவிட்டார். பிறகு கீழே கிடந்த கட்டையை எடுத்து அ.சா1ன் வாயின் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார்.

2) அடித்ததால் ஒரு பல் வாசுவிற்கு கீழே விழுந்துவிட்டது. பிறகு அ.சா.1 மயக்கமடைந்துவிட்டார். பிறகு அவர் மாமா அர்த்தனாரி என்பவர் கார் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 42/2024**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 15.07.2025.**

| Name :அர்த்தனாரி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கட்டநாயக்கன்பட்டியில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் தங்கை மகன் ஆவார். ஆஜர் எதிரி அய்யந்துரை என்பவர் கடந்த 06.07.2023ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு கோவில் அருகே அ.சா.1 இடம் எதிரி காசு கேட்டது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. கூட்டமாக இருந்த சமயத்தில் ஆஜர் எதிரி அய்யந்துரை கட்டையை எடுத்து அ.சா1ன் வாயின் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். அடித்ததால் ஒரு பல் வாசுவிற்கு கீழே விழுந்துவிட்டது. பிறகு நான் கார் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.